[1974 சனவரி 21

திருநெல்வேலி மாவட்டத்தில் அணைக்கட்டுத் திட்டங்கள்

*45 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கருப்பாநதி, பிளவுக்கால் ஆகிய இரு அணைக்கட்டுத் திட்டங்கள் தமிழ்நாடு அரசு தற்போது செயல்படுத்தி வருகின்றதா?

(இ) இதனுல் திருநெல்வேலி இராமநாதபுரம் மாவட்டங்களில் புதிதாக பாசனம் பெறும் நிலங்கள் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) **கருப்பாநதித் திட்டம்:** இத்திட்டத்தினுல் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த 1,164 ஹெக்டேர் நிலங்கள் புதிதாகப் பாசன வசதி பெறும்.

பிளவுக்கால் திட்டம்: இதனுல் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 1,072 ஹெக்டேர் நிலங்கள் புதிதாகப் பாசன வசதி பெறும்.

*46 வினு—திரு. வீ. கார்த்திசன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், இராமநாதபுரம் பகுதியிலுள்ள நம்பியாறு திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) நம்பியாறு அணைக்கட்டு திட்டத்திற்கான ரூ. 10 லட்சத்திற்கான மதிப்பீடு பாசன தலைமைப் பொறியாளரால் உணவு உற்பத்தி வருவாய் வாரியத்தின் மூலம் அரசுக்கு அனுப்பப்பட்டு வருவாய் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.